# வெள்ளிவீதியார் பாடல்களில் பெண் உளவியல்

# Female Psychology in Velliveediyar Songs

***முனைவர் மௌ. அஸ்கர் அலி***
தமிழ்த்துறைத் தலைவர்
ஆச்சாரியா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
புதுச்சேரி, இந்தியா

**Dr. M. Askar Ali**
*Head, Department of Tamil*
*Achariya Arts and Science College,*
*Puducherry, India*

**Citation**: Askar Ali, M. "Female Psychology in Velliveediyar Songs." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 4, 2025, pp. 1-4.

*https://doi.org/10.5281/zenodo.19762181*

*ஆய்வுச் சுருக்கம்*

*சங்க காலத்தில் மிகுதியான பெண்பாற் புலவர்களால் பாடப்பட்ட தொகைநூல் குறுந்தொகை எனலாம். அச்சம், மடம், நாணம், பெண்களுக்கு மட்டுமே உரியதாகச் சங்ககாலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலத்திலும் பேசப்பட்டது. சங்க இலக்கியங்களில் ஆண்பாற் புலவர்களுக்கு நிகராக பெண்பாற் புலவர்களும் தமது கற்பனைத் திறத்தால் சிறப்பான பாடல்களைப் புனைந்துள்ளனர். அவர்களுள் வெள்ளிவீதியார் ஒருவர்தாம் ஒரு பெண்ணாயும் ஒரு புலவராயும் இருந்து பாடியுள்ளதால், பெண்களின் மனநிலையை அறிய அவர் பாடல்கள் மிகவும் உதவுகின்றன. வெள்ளிவீதியாரின் பாடல்கள் குறித்தும், அவரின் பாடல்கள் வழி காணலாகும் காதல் உணர்வுகள் குறித்தும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**Abstract**

*In the Sangam era, many female poets sang kurundogai. Acham, Madam, Nanam were spoken of as belonging only to women during the Sangam period and later. In the Sangam literature, female poets have composed excellent songs as well as male poets due to their imagination. As one of them, Velliveediyar, has sung as a woman and a scholar, her songs are very helpful in understanding the mood of women. The purpose of this article is to examine the songs of Velliveediyar and the romantic feelings expressed through his songs.*

*வெள்ளிவீதியார் குறுந்தொகையில் எட்டுப் பாடல்கள் பாடியுள்ளார். இவரின் பாடல்கள் பெரும்பாலும் பெண்பாற் கூற்றுக்களாகவே அமைந்துள்ளன. கவிஞர் படைப்பின் தனி இயல்பு இவரின் பாடலால் புலப்படுகிறது. காதல் சுவைப்பற்றி பெரும்பாலும் ஆண் மக்கள் பாடிய பாடல்களே காணமுடிகிறது. பெண்பாற் புலவர்களுள் வெள்ளிவீதியார் மட்டுமே பெண்ணின் இயல்பான எண்ணங்களையும், காதலின் ஆழத்தையும் எடுத்துரைத்துள்ளார்.*

*ஔவையார் தமது அகப்பாடலில் தமக்கு முன் வாழ்ந்து பெருமை கொண்ட வெள்ளிவீதியாரைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.*

***நெறிபடு கவலை நிரம்பா நீளிடை***
***வெள்ளி வீதியைப் போல நன்றும்***
***செலவயர்ந் திசினால் யானே (அகம். 147)***

*வெள்ளிவீதியார் தம்மையொத்த ஒரு புலவரைப் பாராட்டி, மற்றொரு புலவரால் பாராட்டப் பெற்றவர் என்ற பெருமையுடையவர். இவரைப் பாராட்டிய புலவர் ஔவையார். இவர் பாராட்டைப் பெற்றப் புலவர் ஆதிமந்தியார்.*

***"யானே***
***காதலற் கெடுத்த சிறுமையொடு, நோய் கூர்ந்து***
***ஆதிமந்தி போல், பேதுற்று***
***அலந்தனென் உழல்வென் கொல்லோ" (அகம். 45)***

*என்ற பாடலடிகளின் மூலம் ஆதிமந்தியாரின் சிறப்பை வெள்ளிவீதியார் எடுத்துரைத்துள்ளார்.*

**காதல் உணர்வுகள்**

*சங்க இலக்கியமும், தொல்காப்பியமும் பெண்ணின் உடலை அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு கொண்டவை எனப் புனைந்து குறிப்பிட்ட ஒழுக்கத்திற்குள் ஒடுக்க முயன்றது. வெள்ளிவீதியாரின் பாடல்களில் சமூகம் வரையறுத்துள்ள ஒழுக்கத்திற்கு எதிரான மீறல்கள் பதிவாகியுள்ளதாகக் கருத்து நிலவுகிறது. காதல் உணர்வு பாடல்களை வெளிப்படையாகப் பாடியதன் மூலம் புலவர் தனக்கானவிடுதலையை அன்றே நிலைநாட்டியுள்ளார் என்பதை பின்வரும் பாடல் பதிவுசெய்கிறது.*

***அளிதோ தானே நாணே நம்மொடு***
***நனிநீடு உழந்தன்று மன்னே இனியே***
***வான்பூங் கரும்பின் ஓங்குமணற் சிறுசிறைத்***
***தீம்புனல் நெரிதர வீந்து உக்கா அங்குத்***
***தாங்கும் அளவைத் தாங்கி***
***காமம் நெரிதரக் கைந்நில் லாதே (குறுந். 149)***

*உயிரைவிட நாணம் சிறந்தது என்பது சங்க இலக்கிய மரபு. அந்நாணத்தை விட காதல் இன்பமே சிறந்தது எனமுடிவெடுக்கும் தலைவியின் உள்ளார்ந்த மன நிலையை வடிவமைத்துள்ளார் புலவர்.*

*வெள்ளிவீதியாரின் பாடல்கள் காம இன்பத்திற்கும், காதலின் ஆழத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்திருப்பதால், தன் சொந்த வாழ்க்கையில் அனுபவித்தவற்றை கவிதையாக வடித்துள்ளாரோ என்ற கருத்தும் மேலிடத்தான் செய்கிறது. தலைவி கூற்றாக அமைந்த பாடல்கள் அவரது அனுபவ வெளிப்பாடு போலவே காட்சியளிக்கின்றன.*

*களவொழுக்கத்தில் வந்து கூடிக்கொண்டிருந்த தலைவன், திடீரென வருகையை நிறுத்திவிடவே, தலைவி உணவும், உறக்கமும் கெட்டவளாகி, உடலழகும் கெட்டு பசலை நிறம் படரப் பெற்றாள். தலைவியின் துயர்நிலையைச் சித்தரிப்பதாகப் பின்வரும் பாடல் அமைகிறது.*

***கன்றும் உண்ணாது கலத்தினும் படாது***
***நல்லான் தீம்பால் நிலத்து உக்கா அங்கு***
***எனக்கும் ஆகாது என்னைக்கும் உதவாது***
***பசலை உணீ இயர் வேண்டும்***
***திதலை அல்குல் என் மாமைக் கவினே (குறுந்.27)***

*பசுவின்பால் நிலத்தில் கறக்கப்பட்டு வீணாகி விடுவது போன்று, தலைவியின் மேனி பசலை படரப் பெற்று அழகு வீணாகி விடுகிறது என்று இப்பெண்பாற் புலவர் பசலையைப் பொருள் நலமிக்க வகையில் வேறுவிதமாகப் பாடுகிறார். பெண்ணின் காம நோய்க்கு மருந்தாக அமையும் பாலியலை ஒடுக்க முயலும் போது அது திரிபுநிலை கொள்வதும், வன்முறை வடிவம் எடுப்பதும், தன்னைச் சுற்றியுள்ள அனைத்தையும் பாலியல் கொண்டதாகப் புனைவதும் நிகழ்கின்றது.*

**வெள்ளிவீதியார் பாடல்களில் உவமை**

*சங்க இலக்கியத்தில் உவமைகளை ஒரு வகை உத்தியாகவே புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர். உவமையின் நோக்கம் பொருளைப் புலப்படுத்துவது. ஒரு கருத்தை உணர்த்த வேண்டுமெனில் அக்கருத்து ஆழமாகவும் கேட்போருக்கு இன்பம் பயக்கும் வண்ணம் அமைய உவமை பயன்படுகிறது*

*தொல்காப்பியர் உவமைக்கு என்று ஒரு தனி இயலையே அமைத்துள்ளார். உவமையின் இலக்கணம் குறித்து இளம்பூரணர் பின்வருமாறு மதிப்பிடுகிறார்.*

*"தெரிவிக்க விரும்பும் பொருளை தெரிந்த பழைய பொருளோடு போல, புரைய என்பன போன்ற இணைப்புச் சொற்களால் ஒப்பிட்டு விளக்குவதே உவமையாகும்". பண்டைய இலக்கியங்களுள் குறுந்தொகை உவமைக் களஞ்சியமாகத் திகழ்ந்தது.*

*பாணர் தாம் பிடித்த பச்சை மீனைப் பெய்து வைத்த கலம் புலவு நாற்றம் உடையதாக இருத்தல் போல, தனக்கு வெறுப்பைத் தருவதாய் உள்ள, தலைவனை அடைய முடியாத உயிர் கெட்டு அழியட்டும் என்கிற தலைவியின் புலம்பலை உவமை நயத்தோடு பின்வரும் பாடலில் புலவர் எடுத்துரைத்துள்ளார்.*

***சுரம் செல் யானை கல் உறு கோட்டின்***
***தெற்றென இறீ இயரோ ஐயமற்று யாம்***
***நும்மொடு நக்க வால்வெள் எயிறே***
***பாணர், பசுமீன் சொரிந்த மண்டை போல***
***எமக்கும் பெருகும் புலவு ஆகி***
***நும்மும் பெறே எம் இறீஇயர் எம் உயிரே (குறுந். 169)***

*தலைவியின் புலம்பல் மொழியை உவமைப்படுத்தித் தன் கவித்துவ ஆழத்தின் சிறப்பைப் புலவர் புனைந்துள்ளார். வெள்ளிவீதியார் பயன்படுத்தும் பெரும்பாலான உவமைகள் தலைவியின் துன்ப வாழ்வினையும்உணர்வினையும், காதல்மையமிட்டதாக அமைந்துள்ளது. வானத்து விண்மீன் போல், இடைச்சுரத்து போதிலும், உவாமதி போன்ற தலைவனைக் செல்வோர் பலர் காணேன் இருந்த எனத் தலைவி கலங்குவதாக பின்வரும் பாடல் அமைகிறது.*

***"காலே பரிதப் பினவே கண்ணே***
***நோக்கி நோக்கி வாள் இழந்தனவே***
***அகல் இரு விசும்பின் மீனினும்***
***பலரே மன்ற இவ் உலகத்துப் பிறரே" (குறுந். 44)***

*இப்பாடலில் பயின்றுவரும் உவமையில்மீன் போன்றோர் பிறர் அம்மீனினும் பலராவர் என்பதனைக் கூறி, பாட்டில் மதியைக் காட்டவில்லை. மதி போன்ற தலைவனைத் தான் காணாததால் பாட்டிலும் மதியைக் காட்சிப்படுத்தாத நிலையைக் காணலாம்.தலைவன் விண்மீனுக்கு உவமையாகக் காட்டப்பட்டுள்ளான்.*

*வெள்ளிவீதியார் பயன்படுத்தும் உவமைகள் தனித்துவமானவை. மற்றப் புலவர்களிடமிருந்து இவரின் உவமைப் பண்பு வேறுபட்டது என்பதை இவரது பாடல் அடிகள் பறைசாற்றும்.*

**முடிவுரை**

*ஆண் புலவர்களின் ஆதிக்கம் நிறைந்திருந்த சங்க இலக்கியத்தில் பெண்ணின் உரிமையை நிலை நிறுத்த பாடுபட்ட பெண்கவி வெள்ளிவீதியார் ஒருவரே. வெள்ளிவீதியாரின் சிறப்பை ஔவையார் போற்றி பாராட்டியுள்ளார். பெண்பாற் கூற்றுக்களாக அமைந்த இவரது*

*பாடல்கள், அவரின் சொந்த வாழ்க்கை அனுபவ வெளிப்பாடு போலவே காட்சியளிக்கிறது. உவமைக் கவிஞர் என்று பாராட்டும் வல்லமைக் கொண்டவர். காதலின் சிறப்பை வெளிப்படையாகப் பாடியதன் மூலம் பெண்களுக்கான சுய உரிமையை, விடுதலையை நிலை நாட்டிய ஒரே பெண்கவி என்ற பெருமைக் கொண்டவர். ஆணாதிக்க அடக்குமுறைக்கு எதிராக மையம் கொண்டுள்ள இன்றைய பெண் கவிகளின் விடுதலை வேட்கைக்கு சங்க இலக்கியங்களே தொடக்கமாக அமைந்தன.*

**பயன்பட்ட நூல்கள்**

*1. குறுந்தொகை, கழகம் வெளியீடு, 1972.*
*2. மாணிக்கம், வ. சுப. தமிழ்க்காதல், பாரி நிலையம், 1962.*

**References**

1. *Kurunthogai*. Kazhagam Publisher, 1972.
2. Manickam, V. S. *Tamil Love*. Pari Publishers, 1962.